1997 ஏப்ரல் 24]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை செய்யப்பட்டமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 23-4-1997 அன்று மதுரையில் மாநகராட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர்கள் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. வ. வேலுசாமி, மற்றும் திரு. அ. தெய்வநாயகம், திரு. பெருந்துறை நா. பெரியசாமி, திரு. கே. தங்கமணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஜி. பழனிசாமி, திரு டி. மணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எல். சந்தானம், திரு. சி. வேலாயுதன், திரு. சி. ஞானசேகரன், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ப. ரங்கநாதன், திரு. பி. வெங்கடசாமி, திரு. இ. கணேசன்--இந்த 16 மாண்புமிகு உறுப்பினர்களையும் முறைப்படி நான் பேச அழைத்தால், இந்த ஒரு பொருளுக்கே ஒரு மணி நேரத்திற்கு மேலாகும். இருந்தாலும், இது மிக மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்ற காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்குண்டான பதிலை வைத்திருக்கிறார்கள். அவர்களை பதில் சொல்லுமாறு அழைக்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து யார் யார் பேசுவதற்குப் பெயர் அளித்திருக்கிறார்கள் என்ற பட்டியலைத் தாங்கள் இங்கே வெளியிட்டு இருக்கின்றீர்கள். இருந்தாலும் நானும் ஒருமுறை அவர்களுடைய பெயர்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. வ. வேலுசாமி, திரு. அ. தெய்வநாயகம், திரு. நா. பெரியசாமி, திரு. கே. தங்கமணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஜி. பழனிசாமி, திரு. டி. மணி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எல். சந்தானம், திரு. சி. வேலாயுதன், திரு. சி. ஞானசேகரன், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ப. ரங்கநாதன், திரு. பி. வெங்கடசாமி, திரு. இ. கணேசன், ஆகிய இந்த 16 பேரும், இந்த நிலை குறித்து விளக்கம் கேட்க விரும்பி இருக்கிறார்கள் என்றால், மதுரையில் நடைபெற்ற இந்த பயங்கரமான படுகொலையை, கட்சிகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு மனிதநேய உணர்வோடு எல்லா அரசியல் கட்சிகளும் கண்டிக்கின்றன என்பதற்கு அடையாளமாகத்தான் 16 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கின்றார்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 24

மதுரையிலே கொலை செய்யப்பட்ட திருமதி லீலாவதி அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு கடுமையான உழைப்பாளி; பொதுநலத் தொண்டர். அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். நேற்று இந்தச் செய்தி மாலைப் பத்திரிகையிலே வருவதற்கு முன்பே, எனக்கு அறிவிக்கப்பட்டது. மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையிலே அங்கம் வகிக்கின்ற திரு. மணி அவர்களும் இந்தச் செய்தியை எனக்கு நேற்றைக்கே எடுத்துச் சொன்னார்கள்.

பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோளை மாத்திரம் விடுக்க விரும்புகின்றேன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் சார்பில். இந்த இரண்டு கட்சிகளும் ஒரு காலத்திலே பிரிய நேரிட்டபோது, இடது கம்யூனிஸ்ட் கட்சி என்றும் வலது கம்யூனிஸ்ட் கட்சி என்றும் எப்படியோ அழைக்கப்பட்டு, அவர்கள் இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) என்று தங்களுடைய பெயரை அமைத்துக் கொண்டாலும்கூட, ஏடுகளில் இப்போதும் இ. கம்யூனிஸ்ட், வ. கம்யூனிஸ்ட் என்றே செய்திகளை வெளியிடுகிறார்கள். இ. கம்யூனிஸ்ட் என்கிற நேரத்திலே எனக்கேகூட ஏற்படுகின்ற குழப்பம், இது, இந்திய கம்யூனிஸ்ட் என்ற பொருளில் போட்டிருக்கிறார்களா அல்லது இடது கம்யூனிஸ்ட் என்ற பொருளில் போட்டிருக்கிறார்களா என்ற குழப்பம் எனக்கேகூட ஏற்படுகிறது. எனவே, நான் இன்றைக்கு இந்த இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் முதல் வேண்டுகோளாக அந்த ஏடுகளைக் கேட்டுக்கொள்வது, இந்தப் பெயர்களை வெளியிடும்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும், - அவ்வளவு நீளமாகப் பெயரை வெளியிட முடியாவிட்டால், இ. கம்யூனிஸ்ட் என்றால், இந்திய கம்யூனிஸ்டைக் குறிக்கும் என்றும், மா. கம்யூனிஸ்ட் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக் குறிக்கும் என்றும்-அந்த அளவிலாவது பெயர்களைப் போட்டால் இந்தக் குழப்பங்களுக்கு ஒரு முடிவு ஏற்படும் என்ற வேண்டுகோளை பத்திரிகைகளுக்கு முதலிலே நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

23-4-1997 காலை சுமார் 8.15 மணியளவில் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) மதுரை மாவட்டக் குழு உறுப்பினரும், மதுரை மாநகர 59-வது வார்டின் மாமன்ற உறுப்பினருமான, திருமதி லீலாவதி, குப்புசாமி அவர்களின் துணைவியார், நாடார் காம்பவுண்டைச் சேர்ந்தவர், வில்லாபுரம், மதுரை என்ற முகவரியிலே உள்ளவர், கொலை செய்யப்பட்டுள்ளார்.

1997 ஏப்ரல் 24] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 10-50

இச்சம்பவத்தைக் கண்ட திருமதி லீலாவதியின் கணவரான திரு. குப்புசாமி, மதுரை கீரைத்துறை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார். அப்புகாரில் தன் மனைவி திருமதி லீலாவதி மதுரை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் 59-வது வார்டில் போட்டியிட்டு மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், அதே வார்டில் அவருக்கு எதிராக திருமதி வள்ளி, கருமலையான் என்கின்ற அண்ணாதுரையினுடைய துணைவியார் தோல்வியடைந்து விட்டார் என்றும் அதன் பிறகு கருமலையான் என்கின்ற அண்ணாதுரையும் அவரது சகோதரர் முத்துராமலிங்கமும் — முத்துராமலிங்கம், 59-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்—இருவரும் திருமதி லீலாவதியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்து அவரை பயமுறுத்திச் சென்றார்கள் என்றும், லீலாவதி, வில்லாபுரம் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகத்திற்காகத் தீவிர முயற்சி மேற்கொண்டபோது கருமலையான், முத்துராமலிங்கம் இருவரும் அவருக்கு எதிராகச் செயல்பட்டதன் காரணமாக முன்விரோதம் கொண்டு 23-4-1997 காலை திருமதி லீலாவதி கடைக்குச் சென்றபோது அவரை மேற்கண்ட இரு நபர்களும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்து அரிவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களால் தாக்கியதால் திருமதி லீலாவதி அதே இடத்தில் இறந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். லீலாவதியின் கணவர் குப்புசாமி கொடுத்த புகாரின் பேரில் கீரைத்துறை காவல் நிலையக் குற்ற எண் 334/97 பிரிவுகள் 147, 148, 341, 324 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் 23-4-1997 அன்று காலை முதல் மதியம் வரை, மதுரை நகரம், வில்லாபுரம், சிம்மக்கல், தேவர்சிலை, அரசு இராஜாஜி மருத்துவமனை, பெரியார் பேருந்து நிலையம் மற்றும் சில இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டும், கடைகளை மூடும்படி வற்புறுத்தியும் உள்ளார்கள். ஒருசில இடங்களில் நடந்த கல்வீச்சுச் சம்பவங்களால் அரசு போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளும், தனியார் தண்ணீர் லாரியும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சில சமூகவிரோதிகள் கடைகளிலும், ஹோட்டல்களிலும் கற்களை எறிந்து சேதம் விளைவித்துள்ளார்கள். இந்த வழக்கில் கருமலையான் என்கின்ற அண்ணாதுரை கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற எதிரிகளையும் கைது செய்ய காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது அப்பகுதியிலே

நிலைமை கட்டுக்குள் உள்ளது. நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வது, இந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்த தி.மு.க.வினர் என்றாலும்கூட, எந்தவிதமான தயவு தாட்சண்யமும் காட்டாமல், பாரபட்சமின்றி அரசு காவல்துறை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மறைந்தவர் அல்லது கொல்லப்பட்டவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அதே நேரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்களுடைய நினைவைத் திருப்புவீர்களேயானால் குடவாசலில் தங்கய்யா என்ற ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கொல்லப்பட்டார். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அந்த ஆட்சியிலே அமைச்சர்களுடைய காரிலேயே பாதுகாக்கப்பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவீர்கள். இந்த ஆட்சி வந்த பிறகுதான் அந்த வழக்கை எடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிவீர்கள். எனவே ஆளும் கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், குற்றம் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள், நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு மேலும் ஒரு சான்றாக மதுரை மாநகரத்திலே நடைபெற்ற இந்த மகாபயங்கரமான, சொல்வதற்கே வெட்கப்படத்தக்க, அநாகரீகமான படுகொலையை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என்பதையும், இங்கே இதுபற்றிப் பேச விரும்பிய 16 நண்பர்களுடைய உணர்வோடு நானும் என்னுடைய உணர்வை ஒன்றிக் கலக்கிறேன் என்பதையும் எடுத்துக் கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.

3. பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்களின் வினாவிற்கு 23-4-1997 நாள் தான் அளித்த ஒரு துணைக் கேள்வியினுடைய பதிலுக்கு, சட்டப் பேரவை விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் என்னிடம் அனுமதி கோரியிருக்கின்றார்கள். அனுமதி வழங்கியிருக்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.